| Publication | Dina Ethal |
|---|---|
| Date | 25.02.2014 |
| Edition | Chennai |
| Page No | 10 |




அன்னை தெரசா கார்ப்பரேட் குடிமகன் விருதுகளை புற்றுநோய் நிறுவன தலைவர் டாக்டர் சாந்தா, ஏ.சி.சி. மற்றும் மதுக்கரை சிமெண்ட் நிறுவனங்களுக்கு வழங்கினார்.

### லிபா கல்வி நிறுவனம் சார்பில்

# ஏ.சி.சி.,மதுக்கரை சிமெண்ட் நிறுவனத்துக்கு 'அன்னை தெரசா குடிமகன் விருது'

**சென்னை, பிப். 25–**

லிபா கல்வி நிறுவனம் சார்பில் 2014ம் ஆண்டுக்கான அன்னை தெரசா கார்ப்பரேட் குடிமகன் விருதுகள், ஏ.சி.சி. நிறுவனம் மற்றும் மதுக்கரை சிமிண்ட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

லயோலா கல்வி நிறுவனம் சார்பில் சிறந்த வணிக நடைமுறைகள் மற்றும் ஏழை, நலிவடைந்த பிரிவினருக்காக செயல்படும் நிறுவனங்களை கண்டறிந்து, அன்னை தெரசா கார்ப்பரேட் குடிமகன் விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

முன்னதாக நடைபெற்ற விழாவில், புற்றுநோய் நிறுவன தலைவர் டாக்டர் சாந்தா விருதுகளை வழங்கினார். ஏ.சி.சி. நிறுவன இயக்குனர் ராஜீவ் விருதை பெற்றுக் கொண்டார். ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி நிர்வாகி வாகுல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்த ஆண்டுக்கான விருது ஏ.சி.சி. மற்றும் மதுக்கரை சிமெண்ட் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. இறுதி சுற்றில், உற்பத்தி, வங்கி, கட்டுமானம் ஆகிய பல்வேறு துறைகளைச் சார்ந்த 5 நிறுவனங்கள் விருது பட்டியலில் இடம்பெற்றன.

நிகழ்ச்சியில் பேசிய லிபா இயக்குனர் பீட்டர் சேவியர், விருதின் நோக்கமே மாணவர்கள் படிக்கும்போதே அறநெறிகளையும், கற்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதாகும்.

தொழில்துறையில் மட்டுமின்றி மாணவர்கள் சமூக பொறுப்புகளிலும் உள்ள முக்கியத்துவத்தை உணர வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

லிபா விருதுகள் தேர்வு குழுவில், முன்னாள் தலைமை கண்காணிப்பு ஆணையர் என். விட்டல், மற்றும் ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகள், தொழில் மற்றும் கல்வித் துறையில் சிறந்த நிபுணர்கள் இடம்பெற்றுள்ளனர்.